

சாதி ஒழிப்பே !

சமூக விடுதலை !!

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு



இரா. அதியமான்

நிறுவனர்


நாள் : 23.11.2011

திருநெல்வேலி மாவட்டம்

## பத்திரிக்கை செய்தி

1. தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு அறிவிக்கப்பட்ட காலம் தொட்டு அருந்ததியர் மக்கள் அந்த இட ஒதுக்கீட்டில் சிறிது கூட பங்கெடுக்க முடியாத காரணத்தால் ஆதித்தமிழர்பேரவை உள்ளிட்ட சில அமைப்புகள் கோரிக்கைகளாக அருந்ததியர் மக்களுக்கு 6 விழுக்காட்டு உள் ஒதுக்கீட்டை தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடான 18 விழுக்காடிலிருந்து பிரித்து தர வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை ஏற்று கடந்த அரசு தற்போது 3 விழுக்காடு ஒதுக்கீடு செய்து நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்த ஒதுக்கீட்டை கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் நான் ஆட்சிக்கு வந்தால் 3 விழுக்காடு இடஒதுக்கீட்டை உயத்தி தருவேன் என தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார். இந்த செய்தியை அப்போதே பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் வெளிப்படுத்தின. ஆதன் அடிப்படையில் அருந்ததியர் மக்களுக்கான உள் ஒதுக்கீட்டை தமிழக முதல்வர் அவர்கள் 6 விழுக்காடாக உயர்த்தி தர வேண்டும் என எதிர்வரும் 02.12.2011 அன்று 17 மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்தின் செயலாளர்கள் தலைமையில் மாவட்ட தலைநகரங்களில் தொடர்முழக்கம் போரட்டம் நடைபெறுகிறது.

2. முதல் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், நெல்லை நெற்கட்டான்செவல் பாளையத்தின் மாமன்னருமான ஒண்டி வீரருக்கு


தலைமையகம் : அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com



சாதி ஒழிப்பே !

சமூக விடுதலை !!

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு




இரா. அதியமான்

நிறுவனர்


நாள் : 23.11.2014

மணிமண்டபமும், குதிரையில் அமர்ந்தபடி உள்ள முழு உருவச்சிலையும் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு இப்போது வேலை நடைபெற்று வருகிறது. இந்த கட்டுமான பணிகள் துரிதபடுத்த வேண்டும். அந்த மணிமண்டபத்தில் ஒண்டி வீரரின் முழு உருவச்சிலை குதிரையில் அமர்ந்தபடி வைக்க வேண்டும் எனவும் அவருடைய தியாக வீரவரலாற்றை பள்ளி பாடத்திட்டத்திலே கொண்டு வந்து எதிர்வரும் தலைமுறை மாணவர்களுக்கு தேசப்பற்றை ஊட்டிடவும், சாதியற்ற சமத்துவ சமுதாயம் படைத்திடவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனே இழுத்து மூட வேண்டும். போபாலில் நடந்த சாதாரண வேதி மாற்றத்திற்கு மனித சமுதாயம் அழிக்கப்பட்டு இன்று வரை மீள முடியாமல் இருக்கின்ற சூழலில் அணுசக்தியின் கதிர்வீச்சை மக்கள் எதிர் கொள்ள முடியாது. இது பேரழிவிற்கே வழிவகை செய்யும் என்ற காரணத்தினால் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் வேலையை நிறுத்த வேண்டும்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலை பணியில்

இரா. அதியமான்

23-11-2014

நிறுவனர்

ஆதித்தமிழர் பேரவை தமிழ்நாடு


தலைமையகம் : அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com